**தலைப்பு 163 – உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிரதேச அபிவிருத்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் *அமைச்சின்* நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றக்களில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் திறைசேரி அச்சீட்டு குறிப்புக்களில் குறிப்பிடப்பட்ட புள்ளிவிபரங்களுடன் இனங்க வேண்டிய போதிலும் திறைசேரி அச்சீட்டு குறிப்புக்களில் குறிப்பிடப்பட்ட பெறுமதியை அடிப்படையாகக் கொள்ளாமையால் திறைசேரி கணனி அச்சீடு மற்றும் நிதிக்கூற்றுக்கிடையே 02 கணக்கு விடயங்களுக்கரிய ரூபா 561,031,793 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட திறைசேரி அச்சீட்டு குறிப்புக்களில் குறிப்பிடப்பட்ட புள்ளிவிபரங்களுக்கு இடையே இணங்கயிருக்க வேண்டும். | சிகாஸ் நிகழ்ச்சித்திட்டங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களில் பெறுமதியை உள்ளடக்குவதற்கு 2020 வரை சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதால் 2019 ஆம் ஆண்டின் அப்பெறுமதியை உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.2 நிதிச் நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 36 வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | அமைச்சிற்குரிய சகல வாகனங்களின் கிரயம் அல்லது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் 2004 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை அமைச்சினால் கையேற்கப்பட்ட ரூபா 3,152,176,151 பெறுமதியான நிதியல்லாத சொத்துக்கள் மீதியொன்று காணப்பட்ட போதும் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரையாக்கப்படாமை மற்றும் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் சில ஆதனங்களின் ஆரம்ப மீதி உள்ளடக்கப்படாமையால் அம்மீதிகளின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட வில்லை. | நிலையாதன சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட வேண்டும. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை |

### 1.6.3 சேமிப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சவிய கடன் முன்மொழிவுத் திட்டத்தில் அமைச்சின் பெயரில் பிரதேச அபிவிருத்தி வங்கியில் சேமிப்புக் கணக்கொன்றில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 56,035,968 ஆன செலவு மீதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் பெயரில் பராமரிக்கப்படும் வங்கிக் கணக்கின் மீதி அமைச்சின் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | குறித்த அவதானிப்புக்களை பெற்றுக் கொள்வதற்காக உள்ளக, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்ட போதும் அதற்குரிய கோவை புத்த சாசன மற்றும் வயம்ப அிவிருத்தி அமைச்சிற்க அறவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பதில் கிடைத்தவுடன் உங்களுக்கு அனுப்பி |

வைக்கப்படும்

**1.6.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்க கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்க கூற்று 2004 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை காலப்பகுதியிலிருந்து இருந்து வரும் ரூபா 1,426,149 ஆன மீதிகளைத் தீர்வு செய்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தனியான மீதிகள் வகைப்படுத்தல் பொழிப்பின் பிரகாரம் மீதி மற்றும் முற்பணம் கட்டுப்பாட்டு மீதியுடன் சமமாக இருக்க வேண்டும். | இவ்வாண்டில் இக்கடன் மீதிகளை தீர்வுசெய்வதற்கு இக்கடன் மீதிகள் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தவிர அத்திகதியில் அறவிடப்பட வேண்டியிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,479,235 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகள் 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வந்த போதும் அம்மீதிகளை அறவிடுவதற்கு நவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் தொகையொன்று கொடுத்து தீர்வு செய்வதற்கு முன்னர் ஓய்வுபெறல் அல்லது மரணித்தல் சேவை முடிவுறுத்துதல் அல்லது உத்தியோகத்தரொருவர் அரச கூட்டுத்தாபன மொன்றுக்கு விடுவிக்கப் படும் உத்தியோகத்த ரொருவரின் கடன் மீதி தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 பிரிவின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | இக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.6.5 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஆளணி வேதனங்கள் பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 453 இன் பிரகாரம் ஆளணி வேதனங்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 453 இன் பிரகாரம் 17 ஆம் திறைசேரி மற்றும் கணக்காய்வு மாதிரிப் படிவங்களுக்கமைய ஆளணி | நி.பி 453 இன் பிரகாரம் நாளது வரையாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வேதனங்கள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | |
| **(ஆ)** | **கணக்காய்வு ஐயவினாக்கள் பதிவேடு** | | |
| | கணக்காய்வு ஐயவினாக்கள் பதிவேடொன்று நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 452(1) இன் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்கள் பதிவேடொன்று நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட வேண்டும். | தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றதுடன் முறையான பதிவேடொன்றாக நடவடிக்கை எடுக்கப்படும். |
| **(இ)** | **பிணைகள் பதிவேடு** | | |
| | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைகள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்ட தகவல்கள் உள்ளடக்கப்படும் வகையில் பிணை வைக்கப்பட உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணை பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பதிவேடுகள் பேணப்பட வேண்டும |
| **(ஈ)** | **நட்டங்கள் தொடர்பான பதிவேடு** | | |
| | நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று சில பிரிவுகளால் மாத்திரம் தகவல்கள் உள்ளடக்கப்பட்டு பேணப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளுக்கமைய அதன் கீழான மாதிரிக்கமைய நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பதிவேடுகள் பேணப்பட வேண்டும். |
| **(உ)** | **பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு** | | |
| | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்களை நாளாந்தம் பரிசீலனை செய்யக்கூடிய முறையில் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேட்டில் அந்த பொறுப்புக்கள் பதிவு செய்யப்பட வேண்டும். | நாளதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்படும் |
| **(ஊ)** | **பெறுகைகள் குழுவின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுக்களின் வருகைப் பதிவேடு** | | |
| | வழிகாட்டிக் கோவையின் குழுவின் செயலாளரால் வருகைப் பதிவேடொன்று நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டிக்கமைய குழுவின் செயலாளரால் வருகைப் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | தற்போது அங்கத்தவர்களின் கையொப்ப பதிவேடொன்று பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் அது முறையாக பதிவேடுகளுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) பிரிவு | ஒவ்வொரு நிறுவனத்தினாலும் நிதிக்கூற்றுக்களுடன் விதிகள மூலம் அறிவிக்கப்படக் கூடிய காலப்பகுதியில் அந் நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 செயலாற்றல் அறிக்கை 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | அவ்வறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடிரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 565(5) | ஒவ்வொரு மாதத்திற்காக பொது 71 மாதிரியில் தயாரிக்கப்பட்ட மாதாந்த வைப்புக்கள் இடுத்த மாதம் முடிவடைவதற்கு முன்னர் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 05 வைப்புக் கணக்குகளுக்குரிய 2018 சனவரி முதல் திசெம்பர் வரையான மாதாந்த வைப்பு பொழிப்பு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதன் பின்னர் அந்த அறிக்கையை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ii) நிதிப்பிரமாணம் 880(1) | அமைச்சின் காசோலை கையொப்பமிடும் உத்தியோகத்தர்கள் பிணை கட்ளைச் சட்டத்தின் கீழ் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | எதிர்காலத்தில் முறைப்படி பிணை பதிவேடு பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 பெப்ரவரி, ஏப்ரல் மற்றும் செப்தம்பர் மாதங்களில் தவிர ஏனைய மாதங்களில் கோரப்பட்ட கட்டுநிதி திட்டமிடப்பட்ட கட்டுநிதியை மிகைத்து 3 சதவீதம் முதல் 137 வரையான அளவில் அதிகரிததிருந்ததுடன் அதன் பிரகாரம் ஆண்டின் கட்டுநிதி தேவைப்பாடு முறையாக திட்டமிடப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த கட்டுநிதி தேவைப்பாடு முறையாக திட்டமிடப்பட வேண்டும். | சில மாதங்களில் கோரிய கட்டுநிதி திட்மிடப்பட்ட கட்டுநிதியை மிகைத்து அதிகரிப்பதற்கு காரணம் முன்னைய மாதங்களில் கோரப்பட்ட கட்டுநிதி அளவினை விட குறைந்த கட்டுநிதி அளவு பொது திறைசேரி வழங்கியமையாகும். வருடாந்த கட்டுநிதி தேவைப்பாடு திட்டமிடப்பட்டு கோரப்பட்ட போதும் கோரப்படட அளவே கிடைக்கா மையால் கட்டுநிதி எல்லை அதிகரிப்பிற்கு நேர்ந்தது. |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 45 செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,361.28 மில்லியனான ஏற்பாட்டில் ரூபா 2,271.07 மில்லியன் பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன் அச்செலவின விடயங்களுக்கரிய சேமிப்பு தேறிய நிதிஏற்பாட்டில் 25 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயற்திறன் மற்றும் சிக்கனமாக பயன்படுத்தியமை, கட்டுநிதி கிடைக்காமை, அமைச்சு மாறியமை, கையிலுள்ள பட்டியல்கள் மற்றம் பொறுப்புக்கள் காணப்படல்ஈ இரண்டு அமைச்சுக்கள் மூலம் செலவிடப்பட்டமையால் செலவின முகாமைத்துவம் பலவீனமாக இருந்தமை, உததியொகத்தர்களை பயிற்சிகளில் ஈடுபடுத்த முடியாமல் போனமை, வெளிநாட்டு பயணம் மட்டுப்படுத்தப்பட்டமை, புதிய கலாசார நிலையங்களை நிர்வகிக்க முடியாமை, அமைச்சு விடயப்பரப்பு வேறுபட்டதுடன் திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த முடியாமை, அரசியல் |

| | | |
|---|---|---|
| | | ஸ்திரமற்றதன்மைஅபீவருத்தி செயற்பாடுகளுக்காக காணி கிடைகக்காமை, மேலதிக நேர வேலையில் ஈடுபவது தொடர்பாக தேவைப்பாடு உருவாகாமை, எதிர்பார்க்கப்பட்ட செலவினம் இட்பெறாமை போன்ற காரணங்களினால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டன. |
| (ஆ) செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 05 செலவின விடயங்கள் மற்றும் அபிவிருத்தி வேலைகளின் கீழ் 11 செலவின விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபா 756.01 மில்லியன் நிதிஏற்பாட்டில் ரூபா 751.22 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது 43 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சினை எடுத்திருந்தது. | - மேற்படி - | செலவின விடயங்களை சீர் செய்யப்படாமை, கையிலுள்ள பற்றுச்சீட்டுக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு கடப்பாட்டிற்காக நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை, கட்டுநிதி கிடைக்காமை காரணமாக கையிலுள்ள பட்டியல்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு கடப்பாடு மேற்கொள்ளல், அமைச்சு 03 சந்தர்ப்பங்களில் திருத்தம் செய்யப்பட்டமையால் நிலையங்களை திறத்தல் மற்றும் செயன்முன்னேற்ற மீளாய்வுக் கூடங்களை நடாத்துவதை மட்டுப்படுத்தல் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் பராமரிப்ப செலவினம் உருவாகாமை, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காணி கிடைக்காமை போன்ற காரணங்கள் காரணமாக சேமிக்கப்பட்டிருந்தது. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 2.76 மில்லியன் செலவினம் தொடர்பில் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்குரிய பொறுப்புக்களும் சரியாக இனங் காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | ரூபா 497,905 ஆன உறுதிச்சீட்டுக்கள் தாமதம் காரணமாக பொறுப்பு பதீட்டிற்கு உட்படுத்தப்படவில்லை. எஞ்சிய பெறுமதி பெறுமதி பல சேர்க்கப்பட்டு திரட்டிய மீதிகளாக காண்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகள் மற்றும் ஏனைய சேவைகளுக்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக செலுத்திய செலவினம் விகிதமாக்கப்பட்டு 2018 ஆம் | - மேற்படி - | உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகள் மற்றும் ஏனைய சேவைகளுக்காக 2018 மற்றும் 2019 ஆம் இரண்டு ஆண்டுகளில் செலவினம் பொதுவாக ஒரே |

| | | |
|---|---|---|
| ஆண்டிற்குரிய பங்கு மாத்தம் பொறுப்பாக எடுக்க வேண்டிய போதிலும் 5 சந்தர்ப்பங்களில் ரூபா 243,075 ஆன பொறுப்புக்களை இனங்காண முடியாதிருந்தது. | | உறுதிச்சீட்டில் உள்ளடக்கபட்டுள்ளமையயால் இரண்டு ஆண்டுகளிற்கான செலவுகளை வெவ்வேறாக இனங்காண்பது சிக்கலானதாகும். எனினும் இதற்கு பிறகு அவ்வாறான தாமதமொன்று இடம்றொமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.4 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ஒப்பந்தங்களுக்காக நிறுத்தி வைத்தல் பணம் வைபபுக் கணக்கில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 63.48 மில்லியன் ஆன மீதிொன்று காணப்பட்டது. இம்மீதிகளில் 02 ஆண்டுகளை விஞ்சிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9.28 மில்லியனான 24 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிறுத்தி வைத்தல் தொடர்பான உரிய நிறுவனங்களின் பொறுப்பேற்றலின் பிரகாரம் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படும். |

### 2.5 வங்கிக் கணக்கு செயற்படுத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| வங்கி கூற்றின் பிரகாரம் மீதி ரூபா 14.07 மில்லியன் இனங்காணப்படாத கொடுப்பனவு தொடர்பாக வங்கியிடமிருந்து விசாரித்து கணக்குகளில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு மாததிற்கும் தயாரிக்கப்படும் வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கும் போது அவதானிக்கப்படும் இணங்காத கொடுப்பனவு தொடர்பாக அமைச்சினால் வங்கியிடம் தகவல் தகவல்களை கோரி கணக்குகளில் சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். | இணங்காத கொடுப்பனவு கணக்கீடுசெய்வதற்குரியள இலகுவாக தகவல்களைப் பெற்றக்கொள்வதற்காக வங்கி இணக்கக் கூற்று விடயத்திற்குரிய உத்தியோகபூர்வ வங்கி கணக்கின் ஊடாக இடம்பெறும் அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கலுக்காக வேறான கோவையொன்று ஆரம்பித்து பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப் பட்டிருந்த போதும் அதனுடன் நாளது வரையாக்கப்பட்ட நிறுவனத்தின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது சேவையிலுள்ள பதவியணியினர், வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரித்து சமர்ப்பிக் கப்பட வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்படதன் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்காக தேவையான விடயங்களை உள்ளடக்கி 2019 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரித்து சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.2 செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 2011 ஆண்டின் போது அனைத்து பிரதேச செயலக பிரிவுகளிலும் கலாச்சார நிலையமொன்று நிறுவும் நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தப்பட்ட போதும் 2018 திசெம்பர் 31 வரை 110 பிரதேச செயலக பிரிவுகளில் கலாச்சார நிலையங்களை அமைப்பதற்கு அமைச்சு தவறியிருந்தது. | ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த வரையறுக்கப்பட்ட வளமான அரசின் நிதிஏற்பாட்டை ஆக்கபூர்வமாகவும் செயற்திறனாகவும் முதலீட்டு மேம்படுத்தல் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு ஈடுத்தப்பட வேண்டும். | பல்கலைக்கழகங்கள், பாடசாலைகளிலும் கலாசார மத்திய நிலையங்கள் பராமரித்துச் செல்லப்படுவதால் ஒரு பிரதேச செயலக பிரிவிற்கு ஒரு நிலையம் வீதம் தாபிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) 09 கலாச்சார நிலையங்களை அமைப்பதற்கு 2018 திசெம்பர் 31 வரை ரூபா 93.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்டு 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும் 2019 பெப்ரவரி மாதம் அளவிலும் வேலைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இலக்கிடப்பட்ட காலப்பகுதியில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் சரியான கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | இந்நிலையங்களின் நிர்மாணத்திற்காக குறைந்த அளவு நிதிஏற்பாடு கிடைத்தமையால் நிர்மாணத்தை விட்டு விட்டு மேற்கொள்வதால் இத்தாமதம் இடம்பெற்றுள்ளது. மேற்கொள்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கலாச்சார நிலையங்களில் நிர்மாணிக்கும் போது ஏற்பட்டிருந்த காணிச் சச்சரவுகள், காணி மண்சரிவு போன்ற காரணங்களினால் 03 நிலையங்கள் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அதற்காக மொத்தம் ரூபா 4.26 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | கலாச்சார நிலையங்களை நிர்மாணிப்பதற்காக தெரிவுசெய்த காணிகளின் உரித்து சச்சரவுகள் சுற்றாடல் சிநிலைமை தொடர்பாக ஆரய்ந்து பார்த்து பின்னர் சிக்கல்கள் அல்லாத இடங்களில் நிர்மாண வேலைகள் மேற் கொள்ளப்பட வேண்டும். | கஹவத்த, சம்மாந்துறை, பேசாலை கலாச்சார நிலையங்கள் மண்சரிவு, யுத்த நிலரம் போன்ற காரணங்களில் இடையில் நிறுப்பட்டிருந்தன. |
| (ஈ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ரூபா 1,258.3 மில்லின் மதிப்பிடப்பட்ட கிரயமான 42 மூலதனச் செயற்திட்டங்கள் மற்றும் ரூபா 38.1 மில்லியனான 39 மீண்டெழும் செலவின விடயங்கள் உள்ளடக்கப்பட்டு உத்தேச செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்தன. எனினும் செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் இணைந்த வகையில் செயன் முன்னேற்றம் சமர்ப்பிக்கப்படாமையால் செயலாற்றலை பரீட்சிக்க முடியாமல் இருந்தது. | அமைச்சினால் ஆண்டினுள் செயற்படுத்தப்படும் மூலதன மற்றும் மீண்டெழும் செயற்பாடுகளின் செயன்முன்னேற்ற அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |
| (உ) | சமூக கலாசார ஒன்றிணைந்த அலுவல்கள் செயற்திட்டத்தின் கீழான ரூபா 485 மில்லின் கிரயமான 28 மூலதனச் செயற்திட்டங்கள் மற்றும் ரூபா 126.5 மில்லியனான 10 மீண்டெழும் செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| | (i) மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு முழுமையாக பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட உள்நாட்டு அறிவு மற்றும் கலாசார பெறுமமதகள் தொடர்பாக ஆராய்ச்சி செயற்பாடுகள், சேவைக்கால பயிற்சி நிலையம் மற்றும் வியாங்கொடை அருங்கலை கிராமம் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக செயன்முன்னேற்றம் 10 முதல் | ஆண்டினுள் இலக்கிடப்பட்ட செயற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட செயன் முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வியாங்கொடையில் அமைந்துள்ள தேசிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 2018 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடுகளில் எஞ்சிய பணம் அருங்கலை கிராம செலவின விடயத்திற்க முறைப்படி மாற்றுவதற்கு முடியாமையால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 50 சதவீதத்திற்கு இடையில் காணப்பட்டது. | | |
| (ii) | புதிய கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்கும் காணப்படும் கலாசார நிலையங்களின் வசதிகளை மேம்படுத்துவ தற்காக ரூபா 300 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்த போதிலும் ரூபா 303.86 மில்லியன் செலவிடப் பட்டிருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்ங்களின் பௌதீக முன்னேற்றம் 90 சதவீதமாக இருந்தது. | சரியான மதிப்பீட தயாரிப்பது உட்பட மதிப்பீட்ட மிகைத்த செலவினம் மேற் கொள்ளக் கூடாததுடன் இலக்கிடப்பட்ட பௌதீக முன்னேற்றத்தை அடைந்து கொள்ள முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். | இச்செயற்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 300 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் உள்ளவாறாக ரூபா 550 மில்லியன் அளவில் தேவையாகும். அத்தேவையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டால் பௌதீக இலக்கினை அடைந்து கொள்ள கூடியதாக இருந்திருக்கும் |
| (iii) | 04 செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 100 சதவீதமாக இருந்த போதும், மிகை ஏற்பாடு செய்யப்பட்டதால் சேமிப்புக்கள் மொத்த ஏற்பாட்டின் 3.4 சதவீதம் முதல் 30 சதவீதம் வரையான வீச்சினை கொண்டிருந்தன. | மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | இச்செயற்திட்டத்திற்காக ரூபா 300 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்த போதும் உள்ளவாறாக ரூபா 550 மில்லியன் அளவில் தேவையாகும். அத்தேவையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டால் பௌதீக இலக்கினை அடைந்து கொள்ள கூடியதாக இருந்திருக்கும் |

## 3.3 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டங்களை அமையாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| அரசின் பத்து இலட்சம் தொழில் வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்திள் கீழ் வடமேல் மாகாணத்தில் 05 ஆண்டுகளில் சுயதொழில், சிறிய வியாபார மற்றும் முயற்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள செயற்படுத்த 2016 ஆம் ஆண்டின் பொ்த அமைச்சிற்கு ரூபா 500 மில்லியன் சுழற்சிக் கடன் நிதிய செயற்திட்டமொன்றிற்காக ஈடுபடுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அச்செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக அமைச்னால் பிரதேச அபிவிருத் வங்கியுடன் 2016 ஆம் ஆண்டின் போது புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திட்டு வங்கிக்கு ரூபா 500 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன. | | |

| | | | |
|---|---|---|---|
| (அ) | அமைச்சு மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மேலதிகமாக வயம்ப பிரதேசிய அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்துடன் பிரதேச அபிவிருத்தி வங்கி புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட முன்மொழி வின் பிரகாரம் இச்செயற்திட்டம் அரச வங்கியின் ஊடாக மேற்கொள்ள அனுமதி வழங்கியிருந்தும் அதற்கு முரணாக இக்கடன் முன்மொழிவு முறமை செயற்படுத்தப்பட்டிருந்தது. | அமைச்சின் நிதிஏற்பட்டில் மேற் கொள்ளப்படும் இத்தகைய செயற் திட்டங்கள் ஆரம்பிக்க முன்னர் சட்டமா அதிபரின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட முன்மொழி வின் பிரகாரம் இச்செயற்திட்டம் செயற்படுத்த வேண்டும் | குறித்த அவதானிப்புக்களை பெற்றுக் கொள்வதற்காக உள்ளக, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்ட போதும் அதற்குரிய கோவை புத்த சாசன மற்றும் வயம்ப அபிவிருத்தி அமைச்சிற்கு அறவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பதில் கிடைத்தவுடன் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். |
| (ஆ) | கடன் வட்டி வருமானத்தில் குறித்த வங்கியின் நிர்வாக மற்றும் ஏனைய கட்டணங்களாக கழிக்கப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் சுழற்சி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். அதன் ஆலோசனைகளுக்கு முரணாக 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் கடன் மீது வட்டியான ரூபா 17.08 மில்லியன் பிரதேச அபிவிருத்தி வங்கியின் கீழ் இருந்த வ/ப வயம்ப பிரதேச அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | 2016 நவம்பர் 25 ஆந் திகதிய BD/HR 163/9/01/VOL II ஆம் இலக்க தேசிய பாதீட:டு திணைக்களத்தின் பணிப்பாளரின் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | - மேற்படி - |
| (இ) | செயற்திட்டத்திற்காக முற்பண கொடுப்பனவின் போது அதன் சாத்தியவளத்தை உறுதிப்படுத்தி அதற்காக ஈடுபடுத்தும் பணம் விரயமாகாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுனெ அறிவிக்கப்பட்டிருந்த போதும் வங்கிக்கு முற்பணம் வழங்கும் போது சாத்தியவளத்தை உறுதிப்படுத்தியதாக எந்தவொரு சான்றும் காணப்படவில்லை. | செயற்திட்டம் தொடர்பாக அதிமேதகு சனாதிபதியின் 2016 ஒக்தோபர் 03 ஆந் திகதிய 16/946/722/014 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்குரிய அவதானிப்புக்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | - மேற்படி - |
| (ஈ) | சவிய கடன் முறைமையின் கீழ் 2016 நவம்பர் முதல் 2018 யூன் வரை வடமேல் மாகாணத்தில் வசிக்கும் முயற்சியாளர்களுக்காக ரூபா 511.57 மில்லியன் கடன் வழங்கப்பட்டி ருந்ததுடன் அதில் 2018 யூன் வரையில் அறவிடப்படாத கடன் தொகை ரூபா 26.41 மில்லியன் மாத்திரமாக இருந்தது. | செயற்திட்டத்தை ஆரம்பித்தற்கு முன்னர் இக்கடன் தொகையை அறவிடும் இயலுமை மற்றும் கடன் அறவிடுவதற்குரிய நிபந்தனைகள் புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | - மேற்படி - |

**3.4 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கலாசார நிலையங்களில் உள்ள திறமையான கைப்பணியாளர்களை ஈடுபடுத்தி 2018 ஆம் ஆண்டின் போது அமைசசினால் “ குவன்னா” பெயரில் நிர்மாணிக்கப்பட்டு நடிப்பதற்காக ரூபா 8.4 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன. | | |
| (i) 2006 அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.1(அ) வழிகாட்டலின் பிரகாரம் செலவினம் மேற்கொள்வதற்காக 7 சந்தர்ப்பங்களின் போது ரூபா 14.74 மில்லியன் பெறுமதியான 7 மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதும் மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதற்காக மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்படாதிருந்தது டன், அரசின் பெறுகை 7 மதிப்பீடுகள் மாத்திரம் தயாரிக்கப்பட்டு குறித்த செலவினம் மேற் கொள்ளப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.1(அ) வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) 2006 அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4 வழிகாட்டலின் பிரகாரம் முத்திரையிடப்பட்ட கூறுவிலை பெற்றுக் கொள்ளாமல் கைப்பணியாளர்களின் அணியும் அணிகலன்களை வடிவமைப்பதற்கு ரூபா 1.98 மில்லியனும் அணியும் பொருட்களுக்காகவும் மேடையின் பின்னணி அலங்காரத்திற்காகவும் ரூபா 766,000 மற்றும் மொத்த நிகழ்ச்சித்திட்டத்தின் உணவு பானங்களுக்காக ரூபா 2.11 மில்லியனும் செலவிடப்பட்டிருந்தது. | | |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சிற்கு சொந்தமான 28 வாகனங்களுக்குரிய மெய்மையாய்வு மேற்கொள்ளப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 1647(ஆ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 40 வாகனங்கள் அளவில் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்படவில்லை. மேற்கொள்ளப்பட்டதுடன் வெவ்வேறு காரணங்களினால் எஞ்சிய வாகனங்களை பௌதீக ரீதியாக பரீட்சிக்க முடியவில்லை. |
| (ஆ) | கட்டிட்கள் மற்றம் நிர்மாணங்களின் கீழ் ரூபா 287.13 ஆன கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த காணிகளின் உரித்தினை 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அமைச்சிற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் முறையாக கையேற்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும். | இக்காணி அமைச்சிற்கு கையேற்கப்பதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.6 கணக்காய்வு யைவினாக்களுக்கு பதிலளிக்கப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விசாரணைகள் தொடர்பான விபரங்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய 2019 மே வரை வழங்கப்பட்ட 04 கணக்காய்வு ஜயவினாக்களுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒவ்வொரு கணக்காய்வு யைவினாவிற்காக ஒவ்வொரு பிரிவிடமிருந்து அவதானிப்புக்களை பெற்றுக் கொள்வதற்கு சிறிது காலம் தேவைப்படுவதால் பதில் வழங்குவதற்கு தாமதம் ஏற்பட்டுள்ளது. எதிர்வரும் தினங்களில் பதில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, நிறுவனத்தின் நிதி மற்றும் கணக்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் கட்டுப்பாட்டிலிருந்து விலகியதாக இருக்க வேண்டிய போதிலும் அமைச்சின் தலைமை உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தருக்கு இரண்டாவது கையொப்பமிடுபவராக காசோலையில் கையொப்பமிடும் அதிகாரம் அளிக்கப்பட்டிருந்ததுடன் அதிகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், அதன் காரணமாக உள்ளகக் கணக்காய்வின் சுயாதீனத்துவம் மீறப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் நி.பி 134(1) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, நிறுவனத்தின் நிதி மற்றும் கணக்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர் களின் கட்டுப்பாட்டிலிருந்து விலகியதாக இருக்க வேண்டும். | பிரதான கணக்காளர் ஓய்வு பெற்றுள்ளதால் வேறு பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை பெற்றுக் கொள்ளும் வரை தலைமை உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தரின் பெயர் வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அந்த உத்தியோகத்தரின் கையொப்பம் காசோலையில் கையொப்பமிட்டிருக்கவில்லை . |